அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

**அ.எண்**:09/2017
**தேதி**:20.1.2017

**பாராளுமன்றத்தில் சட்டத்திருத்தம் மூலம் நிரந்தர தீர்வு காணவேண்டும்.**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை.**

அவசர சட்டம் பிறப்பிப்பதற்கான முன் வரைவை சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் சில திருத்தங்களுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டதை அறிந்தேன்.

அவசர சட்டம் கொண்டுவர ஏதுவாக உச்சநீதிமன்ற தீர்ப்பை 1 வார காலம் ஒத்திவைக்க உச்சநீதிமன்றத்தை மத்திய அரசு கேட்டுக்கொண்டது.

இது அவசர சட்டத்தை ஆதரிப்பதற்காக என்றே இருந்தாலும், 6 மாத காலத்திற்கு மட்டும் செயலில் இருக்கும் இந்த நடவடிக்கையால் ஜல்லிக்கட்டு நடத்த இயலும் என்றாலும், இதற்கு நிரந்தர தீர்வு உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருப்பவர்களும், தங்களை இணைத்துக்கொண்டிருப்பவர்களும் வழக்கை வாபஸ் பெறுவதும், சுற்றுசூழல் அமைச்சகம் 2011-ஆம் ஆண்டில் காட்சி மிருக வரிசையில் காளைகளை இணைத்ததை நீக்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தமிழ்நாட்டில் பொதுமக்களின், மாணவர்களின், இளைஞர்களின், உன்னத போராட்டத்திற்கு பாராளுமன்றம் கூடியவுடன் சட்ட திருத்தம் துரிதமாகவும், அழுத்தமாகவும் செய்தால்தான் உண்மையான வெற்றியாகவும், நிரந்தர தீர்வாகவும் இருக்கும் என்று கருதுகிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,



**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்